[1992 செப்டம்பர் 22

6—

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு புதிய விடுதி.

*9126 — திரு. சோ. இராசாராமன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் புதிதாக பல்கலைக் கழக மாணவர்களுக்காக விடுதி கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பல்கலைக் கழக மானியக் குழுவின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி "கட்டடக் குழு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு பல்கலைக்கழக மானியக் குழுவின் நல்கை கிடைக்க பெற்றவுடன் முதற்கட்டமாக ஆடவர் விடுதி கட்டடக்கட்டுமானப் பணிகள் தொடங்கப் பெறும்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழகம் தோன்றி ஏறத்தாழ 10 ஆண்டுகளாகியும் இதுவரை அங்கே படிக்கிறவர்கள், ஆராய்ச்சி செய்கிறவர்கள் தங்குவதற்கு விடுதிகள் இல்லை. உடனடியாக விடுதிகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டாலும், அதனுடைய மதிப்பீடு எவ்வளவு, அதை எந்தக் காலக் கட்டத்தில் முடித்துக் கொடுப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய மதிப்பீடு ரூ.26.67 லட்சமாகும். இதில் மத்திய அரசின் பல்கலைக் கழக மானியக் குழுவின் மானியம் ரூ. 20 லட்சமாகும். தமிழக அரசு ரூ. 6.67 லட்சம் கொடுக்கிறது. அதே போல, சுவடிக் கூடம் கட்ட மானியக் குழு ரூ. 15.27 லட்சமும், தமிழக அரசு ரூ. 5.08 லட்சமும் தர வேண்டும். கலைக்கூடம் கட்டப்படுவதற்கு

மானியக் குழு ரூ. 24.7 லட்சமும், தமிழக அரசு ரூ. 8.25 லட்சமும் தர வேண்டும். ஆக மொத்தம் தமிழக அரசு இந்த மூன்று திட்டத்திற்கும் ரூ. 20 லட்சம் தர வேண்டும். அதில் ரூ. 17.5 லட்சம் தந்திருக்கிறது. ஆனால் மாணவர் விடுதி கட்டுவதற்கு மானியக் குழுவின் நிதி இன்னும் வந்து சேராத காரணத்தினால், நாம் இன்னும் அந்தக் கட்டிடம் கட்ட ஆரம்பிக்கவில்லை. அவர்கள் சொன்னபடி கட்டிடக் குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மானியக் குழுவின் நிதி வந்தவுடன் அந்தக் கட்டிடம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் மொழிக்காக என்று ஒரு பல்கலைக் கழகம் இல்லை. தமிழகத்திலே தான் முதன் முதலில் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் மொழிக்காக ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பித்தாலும், அப்படி ஆரம்பித்து பத்தாண்டுகளாகியும் விடுதி இல்லை. விடுதியில்லாமல் மாணவர்கள் தங்கி ஆராய்ச்சிகளை நல்ல முறையில் செய்வதற்கு உடனடியாக அந்த வேலைகளை அரசு துவங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக் கழகம் தவிர வேறு பல்கலைக்கழகம் இல்லை என்று சொல்வது சரியல்ல. ஆந்திரப் பிரதேசத்திலே தெலுங்குப் பல்கலைக் கழகம் இருக்கிறது. அதே போல சமஸ்கிருதத்திற்கும் பல்கலைக் கழகம் இருக்கிறது. ஆகவே இல்லையென்று சொல்லிவிட முடியாது. வேறு மொழிகளுக்கும் பல்கலைக் கழகங்கள் இருக்கலாம். அது பற்றிய தகவல்கள் என்னிடம் இல்லை. கட்டிடம் கட்டுவதைப் பொறுத்த வரையில், பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதி வந்தவுடன் அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 27, திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

27—

அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார மருந்தகமாக மாற்றுதல்.

*9555 — திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரையில் உள்ள அரசு மருத்துவமனையை ஆரம்ப சுகாதார மருந்தகமாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?